2013 ஏப்ரல் 30]

364—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***7704—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, சாயல்குடி ஒன்றியம், உச்சிநத்தத்திலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள உச்சிநத்தம் அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், ஆவுடையானூர்பாளையம், அ.பொன்னுசாமி நாடார் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட 8-2-2012-ல் அரசிற்கு கோரிக்கை அனுப்பப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, அரசிடமிருந்து 2011-2012 ஆம் கல்வி ஆண்டில் 100 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்ட நிலையில், மேற்படி பள்ளியைத் தரம் உயர்த்த இயலவில்லை என அரசிடமிருந்து தகவல் தெரிவிக்கப்பட்டது. எனவே, 2013-2014 ஆம் கல்வி ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2013 ஏப்ரல் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படவேண்டுமெனில், பல்வேறு நிபந்தனைகளை அரசு நெறிமுறைப்படுத்தி இருக்கிறது. ஒன்று, பங்குத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாய் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அப்படி செலுத்தப்பட்டிருந்தால் அவர்களுக்கு முதல் முன்னுரிமை. இரண்டாவது, அது மகளிர் பள்ளியாக இருந்தால் அதற்கு முன்னுரிமை; மூன்றாவது, மலைப் பகுதி அல்லது ஆதி திராவிடர் மக்கள் அதிகமாக வசிக்கிற பகுதிகளாக இருந்தால் அவற்றிற்கு முன்னுரிமை. அடுத்ததாக, மாநகராட்சிப் பகுதியாக இருந்தால் ஆறு கிரவுண்ட் இடமும், மாவட்ட தலைமை இடமாக இருந்தால் 8 கிரவுண்ட் இடமும், நகராட்சிப் பகுதியாக இருந்தால் 10 கிரவுண்ட் இடமும், பேரூராட்சிப் பகுதியாக இருந்தால் ஓர் ஏக்கர் நிலமும், ஊரகப் பகுதியாக இருந்தால் மூன்று ஏக்கர் நிலமும் வேண்டுமென்று அரசினுடைய நிபந்தனை தெரிவிக்கிறது. இவற்றையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

அடுத்ததாக, அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட வேண்டுமென்றால், ஒரு பள்ளியிலே பத்தாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பிற்கு செல்லக்கூடியவர்கள் குறைந்தபட்சம் 100 மாணவர்கள் 10 ஆம் வகுப்பிலே பயின்று இருக்கவேண்டும். அடுத்ததாக, இன்னொரு மேல்நிலைப் பள்ளிக்கும் மற்றொரு மேல்நிலைப் பள்ளிக்கும் இடைப்பட்ட தூரம் 8 கி.மீ. இருக்க வேண்டும். இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தால், வருகின்ற கல்வி ஆண்டில் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, தாங்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்துவது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 365, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.